Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் ஞாயிற்றுக்கிழமை, ஆகஸ்ட் 15, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 32

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

## முன்னாள் முதல்வர் கருணாநிதியின் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற அரசாணையை 208 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 75 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்





சென்னை, ஆக 15 2021: அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற அரசாணையின் கீழ் மொத்தம் 208 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 75 நபர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

சென்னை கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் கோவில்களில் பணிபுரிவதற்காக 'அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்' என்ற அரசாணையின் கீழ் 24 பயிற்சி பெற்ற அர்ச்சகர்களுக்கும் திருக்கோவில்களில் பணிபுரிய தேர்வு செய்யப்பட்ட அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள், பூசாரிகள், காவலர்கள் உள்ளிட்ட பல்வேறு பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட 172 நபர்களுக்கும் கருணை அடிப்படையில் 12 நபர்களுக்கும் (மொத்தம் 208 நபர்கள்) பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 75 நபர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (14ந் தேதி) பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டும் என முதலமைச்சர் உத்தரவிட்டிருந்தார். அதன் அடிப்படையில், முதற்கட்டமாக அங்கீகரிக்கப்பட்ட பணியிடங்களில் காலியாக உள்ள அர்ச்சகர், பட்டாச்சாரியார், ஓதுவார், பூசாரி, தொழில்நுட்ப உதவியாளர், காவலர், அலுவலக உதவியாளர், மின் பணியாளர் உள்ளிட்ட பல்வேறு பணியிடங்களுக்கு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு அப்பணியிடங்களுக்கு விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு திருக்கோவில் நிர்வாகங்களின் சார்பில் நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டு தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

தந்தை பெரியார், கடவுள் நம்பிக்கை உள்ள அனைவரும் சமமாக வழிபட உரிமை வேண்டும் எனப் போராடினார். அதனால் தான் அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என விரும்பினார். தந்தை பெரியாரின் இதயத்தை தைத்த முள்ளை அகற்றும் விதமாகப் பெரியாரின் விருப்பத்தினை செயல்படுத்தும் வகையில் கருணாநிதி அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற அரசாணையை வெளியிட்டார். அவரது வழியில் செயல்படும் இந்த அரசு தற்போது முறையாகப் பயிற்சி பெற்ற அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்பதை நடைமுறைப்படுத்தி வருகிறது.

அதன் அடிப்படையில், திருக்கோவில் அர்ச்சகர் பயிற்சி பள்ளியில் பயின்று தேர்வு செய்யப்பட்ட அனைத்து சாதியினைச் சார்ந்த 24 அர்ச்சகர்கள், இதர பாடச்சாலையில் பயிற்சி பெற்ற 34 அர்ச்சகர்கள், பூசாரிகள், பட்டாசாரியார்கள், 20 ஓதுவார்கள், 17 பரிசாரகர், நெய்வேத்யம், சுயம்பாகம், 23 திருவலகர்கள், 25 காவல், நந்தவனம் பராமரிப்பு, தோட்டம், 28 தவில், நாதஸ்வரம் (மேளம் செட்), சுருதி, 2 திருமஞ்சனம், 3 ஸ்தானிகம், 7 மணியம், ஊழியம், எழுத்தர், சீட்டு விற்பனை, 3 பரிகலம், 2 மாலை கட்டி, 3 சுப்பரபாதம், தேவபாராயணம், அத்யாபாகர், 3 திருவடி, வில்லம், உக்ராணம், 1 குடைகாரர், 1 யானை பாகன், கருணை அடிப்படையில் 12 நபர்கள், என மொத்தம் 208 நபர்களுக்கு மேலும் உயிரிழந்த 3 பணியாளர்களின் குடும்பத்திற்கு 7 லட்சம் ரூபாய்க்கான குடும்ப நல நிதியும் 5 ஒய்வூதியதாரர்களுக்கு ஒய்வூதிய ஆணைகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என். நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினகள் த. வேலு மற்றும் ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகள், முனைவர் தவத்திரு குமரகுரபர சுவாமிகள், ஆன்மீக பேச்சாளர்கள் சுகி சிவம், தேச மங்கையர்க்கரசி, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் ஜெ. குமரகுருபரன், இந்து சமய அறநிலையத் துறை கூடுதல் ஆணையர் ரா. கண்ணன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பொள்ளாச்சி குடிமைபொருள் குற்ற புலனாய்வு துறையினர் சோதனையில், 4000 லிட்டர் கலப்பட டீசல்,1500கிலோ ரேசன் அரிசி பறிமுதல்



கோவை, ஆகஸ்ட் 14 2021: கோவை வ.உ.சி மைதானத்தில் காவல் துறையின் சார்பில் சுதந்திர தின விழா அணிவகுப்பு ஒத்திகை நடைபெற்றது.

ஆண்டுதோறும் ஆகஸ்ட் 15 ஆம் தேதி சுதந்திர தின விழாவை முன்னிட்டு கோவை வஉசி மைதானத்தில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் கொடியேற்றும் நிகழ்வு மற்றும் காவல்துறை அணிவகுப்புகள் நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம்.

அதன்படி நாளை மறுநாள் சுதந்திர தின விழாவில் கோவை மாவட்ட ஆட்சியர் சமீரன் ஐ.ஏ.எஸ்., வ.உ.சி மைதானத்தில் தேசிய கொடியேற்றுகிறார். இதற்காக இன்று இம்மைதானத்தில் காவல் துறை சார்பாக அணிவகுப்பு ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த ஒத்திகை அணிவகுப்பில் நூற்றுக்கு மேற்பட்ட போலீஸார் கலந்து கொண்டனர்கோவை, ஆகஸ்ட் 15 2021: கோவை மாவட்ட குடிமை பொருள் குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குனர் ஆபாஷ்குமார் உத்தரவுப்படி, குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறை காவல் கண்காணிப்பாளர் கே.ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில் கோயமுத்தூர் உட்கோட்டம் (பொறுப்பு) காவல் துறை துணை கண்காணிப்பாளர் ஜான்சுந்தர் அவர்களின் மேற்பார்வையில் பொள்ளாச்சி குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறையினர் தமிழக கேரள எல்லை பகுதியில் தீவீர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, அப்பாச்சிகவுண்பதி, உழல்பதி ரோடு, குட்டி கவுண்டன்பதி மாட்டு ஆஸ்பத்திரி ஆகிய பகுதிகளின் அருகே நடந்த வாகன சோதனையின் போது (டாடா ஏஸ்) டி.என்.41 ஏடபுல்யு 8538 என்ற வாகனத்தில் 1500 கிலோ ரேசன் அரிசி கேரளாவிற்கு கடத்த முயன்றது தெரிய வந்தது. குடிமைப்பொருள் வழங்கல் அதிகாரிகள் ரேசன் அரிசி மற்றும் வாகனத்தை பறிமுதல் செய்து கடத்தலில் ஈடுபட்ட இருவரை கைது செய்தனர்.

மேலும் மற்றொரு சோதனையில் கலப்பட டீசல் கடத்தி விற்பனைக்கு முயன்ற டேங்கர் லாரியுடன் அதில் இருந்த 4000 லிட்டர் கலப்பட டீசல் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். கோவையைச் சேர்ந்த தனியார் கம்பெனி மேலாளர் சபாபதி மற்றும் வாகன ஓட்டுநர் செல்வகருப்பையா ஆகிய இருவர் மீதும் வழக்கு பதிவு செய்து கைது செய்தனர். தொடர்ந்து தீவிர வாகன சோதனையில் பல்வேறு வழக்குகளில் ஈடுபட்ட சுமார் 15 லட்சம் மதிப்பிலான டேங்கர் லாரி, 407 டேங்கர் லாரி, டாடா ஏஸ் வாகனம், கலப்பட டீசல்,ரேசன் அரிசி,உட்பட 15 லட்சத்திற்கும் மேற்பட்ட கடத்தல் பொருட்களை பறிமுதல் செய்து, வழக்கில் சம்பந்தப்பட்ட டேங்கர் லாரி உரிமையாளர் காளிங்கராஜ் என்பவர் மீது வழக்கு பதிவு செய்து தேடி வருகின்றனர். தனியார் கம்பெனி மேலாளர் சபாபதி, லாரி ஓட்டுநர் செல்வகருப்பையா உட்பட நான்கு பேரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையிலடைத்தனர்.

## கோவையில் ரூ.225 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்பு கருவிகள் உற்பத்தி பூங்கா தமிழக நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளதற்கு பி.ஆர்.நடராஜன் எம்பி வரவேற்பு

கோவை, ஆகஸ்ட் 15 2021: கோவை மாவட்டத்தில் 500 ஏக்கர் பரப்பளவில் பாதுகாப்பு கருவிகள் உற்பத்தி பூங்காவை அமைப்பதற்கான அறிவிப்பை தமிழக நிதிநிலை அறிக்கையில் வெளியிட்டிருப்பதற்கு பி.ஆர்.நடராஜன் எம்பி வரவேற்பு தெரிவித்துள்ளார். மார்க்சிஸ்ட் கட்சியின் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஆர்.நடராஜன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, தமிழ்நாட்டின் நிதிநிலை சிரமங்களை உள்வாங்கிக்கொண்டு குறுகிய கால பயண்கள், நீண்ட கால பயண்கள் என்கிற வகையில் நல்லதொரு நிதிநிலை அறிக்கையை தமிழக நிதி அமைச்சர் முன்மொழிந்துள்ளார். குறிப்பாக கோவை மாவட்டத்தை முதன்மைப்படுத்தி ரூ 225 கோடி மதிப்பீட்டில் 500 ஏக்கர் பரப்பளவில் பாதுகாப்பு கருவிகள் உற்பத்தி பூங்காவை மாநில அரசின் சார்பில் அமைக்கப்படும் எனவும், இதன் மூலம் 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் ஈர்க்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் இந்த அறிவிப்பிற்கு கோவை மக்களின் சார்பில் வரவேற்கிறோம். இத்தகைய அறிவிப்பினால் நேரிடையான வேலை வாய்ப்பு மற்றும் மறைமுக வேலை வாய்ப்பு என பல்லாயிரம் பேர் பயணடைவார்கள். மேலும், மகளிர் சுய உதவிக்குழுவிற்கான கடன் தள்ளுபடி, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.5,500 கோடி சிறப்பு கோவிட் கடன் பெட்ரோல் மீதான வரியில் 3 ரூபாய் குறைப்பு உள்ளிட்ட அறிவிப்புகள் உண்மையில் சாதாரண ஏழை எளிய உழைப்பாளி மக்கள் நேரிடையாக பயன்பெறும் திட்டங்களாகும். இத்தகைய நல்லதொரு நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்த நிதிஅமைச்சருக்கும், தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் என்கிற வகையிலும், கோவை மக்களின் சார்பிலும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். என தெரிவித்துள்ளார்.



## தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசனிடம் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்வளர்ச்சி பெற கொடிசியா சார்பில் கோரிக்கை



கோவை, ஆகஸ்ட் 15 2021: கோவை வந்த தமிழக தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் ஊரகத் தொழிற்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசனிடம் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் இயல்பாக இயங்கி வளர்ச்சி பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கொடிசியா சார்பில் கோரிக்கை வைத்துள்ளனர். இது தொடர்பாக கொடிசியா சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, சிறப்பு முகாம்கள் மூலமாக தகுதி உள்ள அனைவருக்கும் கொரோனா தடுப்பூசிகளை போடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

1994ல் இருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் திருத்தி அமைக்கப்பட வேண்டும். தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு புதிய மாஸ்டர் பிளான் வெளியீடு விரைவுபடுத்தப்பட வேண்டும்.

நகர ஊரமைப்பு இயக்குநர், உள்ளூர் திட்ட குழுமம் மற்றும் வீட்டு வளர்ச்சி துறை ஆகியோரிடம் கட்டிடங்களுக்கான முறையான அனுமதி பெறுவதை விரைவுபடுத்தும் வகையில் தகுந்த மென்பொருளுடன் ஒற்றைச்சாளர அனுமதி முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் தொழிற்சாலை கட்டுமானங்களுக்கு தேவையான தொழிற்சாலை நில் வகைப்பாடு குறித்த விண்ணப்பங்கள் மற்றும் அனுமதிகள் பெறுவது தாமதமாகாமல் விரைவுபடுத்த முடியும். பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் உள்ள அரசு துறை நிறுவனங்களிடமிருந்து வரவேண்டிய நிலுவை தொகையை உடனடியாக சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சொத்துவரி, தொழில்வரி, உரிமத்தொகை, மாசுகட்டுபாடு வாரிய கட்டணம் உள்ளிட்ட அனைத்து செலுத்தவேண்டிய தொகைகளும் மேலும் 6 மாதங்களுக்கு 31.03.2022 வரை எவ்விதமான வட்டி மற்றும் நடவடிக்கைகளில் இன்றி தள்ளி வைக்கப்பட வேண்டும்.

அந்தந்த தொழிற்சாலை வளாகங்களில் புலம்பெயர்ந்து வந்துள்ள தொழிலாளர்களின் தங்குமிடம் வசதியை உருவாக்கிட மானியங்களை அனுமதிக்க வேண்டும். கோயம்புத்தூர் வளர்ச்சி குழும உருவாக்கம் கோயம்புத்தூர்நகரம் அனைத்து வகையிலும் விரைந்து வளர்ச்சி அடைய சென்னை பெருநகர மேம்பாட்டு ஆணையத்தைப் போலவே கோவையிலும் பெருநகர மேம்பாட்டு ஆணையத்தை உருவாக்க வேண்டும்.

மேற்சொன்ன கோரிக்கைகளை அமைச்சர் பெருமக்கள் கனிவுடன் பரிசீலித்து ஆவணம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையிலும் இப்பகுதியில் தொழில்முனைவோர் மற்றும் வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கவும் தங்களுடைய நல் ஆதரவையும், ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

ஞாயிற்றுக்கிழமை,
ஆகஸ்ட் 15, 2021

# மூத்த குடிமக்கள் உதவிக்கு இலவச எண் வெளியீடு: மாவட்ட கலெக்டர் தகவல்

காஞ்சிபுரம், ஆக.15 2021: மாவட்ட கலெக்டர் டாக்டர் மா.ஆர்த்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மத்திய அரசின் சமூக நீதி மற்றும் மேம்பாட்டு அமைச்சகம், தமிழக அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை இயக்குநரகம் மற்றும் கினீமீமீஜ் ஷிஷீயீமீஷ்ணீகூஷீமீ ஷிஷீறீஸுமீவீஷீஸீஷ றிஸ்மீ லிமீபீ. இணைந்து ஆதரவற்ற முதியவர்கள் மீட்பு மற்றும் குடும்பத்துடன் மீண்டும் ஒருங்கிணைப்பு மற்றும் பாதிப்பிற்குள்ளாகும் முதியோர்களுக்கு பராமரிப்பு சேவைகளை வழங்கும் பொருட்டு தேசிய மூத்த குடிமக்கள் உதவி எண் 14567-யினை தமிழ்நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இலவச உதவி எண் மூலம் மூத்த குடிமக்களுக்கு அரசு துறைகளின் ஒருங்கிணைப்பு மூலம் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு சேவைகள் வழங்கப்படும். எனவே உதவி தேவைப்படும் மூத்த குடிமக்கள் மேற்படி இலவச உதவி எண்ணினை தொடர்புகொண்டு பயன்பெறுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.



விழுப்புரம்: விழுப்புரம் வடக்கு மாவட்டம், மயிலம் வடக்கு ஒன்றியம், பெலாகுப்பம் கிராமத்தை சேர்ந்த தி.மு.க செயலாளர் வி.கே.சண்முகம் நேற்று காலை 6 மணியளவில் காலமானார். அவரது உடலுக்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் இரா.மாசிலாமணி, இரா.சேதுநாதன், மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.



தேனி: தேனி மாவட்டம் பெரியகுளம் வடகரை சௌராஷ்டிரா சத்திரத்தில் சபை நிர்வாக கூட்டத்தில் நலிந்த மக்களின் நலனுக்காக சௌராஷ்டிரா மத்திய சபை தலைவர் வி ஆர் ராஜேந்திரன் மற்றும் பொது செயலாளர் என்.எஸ் சங்கர்லால் ஆகியோர் மத்திய சபை நிர்வாகஸ்தர்களின் மிகவும் தீவிர முயற்சியால் முதற்கட்டமாக குடும்பம் 1க்கு ரூ 5000/- வீதம் 5 குடும்பங்களுக்கு வழங்கியதை பாராட்டி சௌராஷ்டிரா சபையின் சார்பாக இதயம் கனிந்த நன்றியை தெரிவித்து கொள்கிறார்கள். இந்நிகழ்வில் பாலகிருஷ்ணன், விஜயகுமார், வி .ராஜன் தலைவர், மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி, ஆகஸ்ட் 15 2021: பெரியகுளம் அருகே மேல்மங்கலத்தில் ஊராட்சி துவக்கப்பள்ளியில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவின்படி பொதுமக்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டது. உடன் குமரகுரு வழக்கறிஞர் சுகாதார ஆய்வாளர் ரெங்கராஜ் ,மற்றும் பணியாளர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.



திண்டிவனம்: விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அடுத்த கூட்டேரிப்பட்டு எல்லையம்மன் கோவிலில் ஆடி வெள்ளிக்கிழமையையொட்டி கூழ் வார்த்தல் திருவிழாவில் அம்மன் ஊஞ்சல் உற்சவம் நடந்தது.

DTP
DESIGN
81482 31942

# காஞ்சீபுரம் மாவட்டத்தில் 2021-22 ஆம் ஆண்டிற்கான வங்கி வருடாந்திர கடன் இலக்கினை மாவட்ட கலெக்டர் டாக்டர் மா.ஆர்த்தி வெளியிட்டார்

காஞ்சிபுரம், ஆக. 15 2021: காஞ்சீபுரம் மாவட்டத்தில் 2021-22 ஆம் ஆண்டிற்கான வங்கி வருடாந்திர கடன் இலக்கினை மாவட்ட கலெக்டர் டாக்டர் மா.ஆர்த்தி வெளியிட்டார்.

காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள மக்கள் நல்லுறவு மையக் கூட்டரங்கில் வங்கியாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் டாக்டர் மா.ஆர்த்தி தலைமை வகித்து 2021-22 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர கடன் திட்டத்தின் நகலை வெளியிட இந்திய வங்கி மண்டல மேலாளர் ஸ்ரீமதி பெற்றுக்கொண்டார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், மாவட்ட முன்னோடி வங்கியான இந்தியன் வங்கி சார்பில் தயாரிக்கப்பட்ட 2021-22 ஆம் ஆண்டிற்கான கடன் திட்டத்தில் ரூ 2821.27 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.1260.96 கோடி விவசாயத்திற்கும், ரூ.856.51 கோடி சிறு மற்றும் குறு தொழில் முனைவோருக்கும், ரூ704.40 கோடி வீட்டு வசதி, கல்விக்கடன் மற்றும் இதர முன்னுரிமை கடன்களுக்கும் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பி.ஸ்ரீதேவி, நபார்டு உதவி பொது மேலாளர் டி.ஆர்.விஜயலட்சுமி, மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் ஜி.எஸ்.சந்திரசேகரராவ், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் எ.சேகர், மாவட்ட மேலாளர் (தாட்கோ) மணிமேகலை, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கே.சண்முகராஜ் மற்றும் அனைத்து வங்கிகளின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



# கோவை மில்ரோடு, சுக்ரவார் பேட்டை முக்கிய சாலையில் பாதாள சாக்கடை சேதமடைந்துள்ள சாலையை சீரமைக்ககோரி அந்த பகுதி பொதுமக்கள் கோரிக்கை

கோவை, ஆகஸ்ட் 15 2021: கோவை மாநகராட்சி 81 வது வார்டுக்கு உட்பட்ட மில் ரோடு சுக்கிரவார் பேட்டை பிரதான சாலையில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடு மற்றும் கடைகள் உள்ளன. இந்நிலையில் இந்த சாலையில் தேர்தலுக்கு முன்பாக பாதாள சாக்கடை பணிகளுக்காக தோண்டப்பட்ட சாலை சரி வர சீரமைக்காமல் இருப்பதால், அந்த பகுதி வீடுகள் மற்றும் கடைகளில் தூசுகள் படிந்து நோய் தொற்றுக்கு பரவும் அபாயம் உள்ளது.,மேலும் கோவையின் முக்கிய சாலையான ஒப்பணக்கார வீதியில் இருந்து அவினாசி ரோடு மேம்பாலம் செல்லும் வாகனங்கள் சேதமடைந்த இந்த சாலையை கடக்க வேண்டி இருப்பதால், வாகனங்களில் வரும் நபர்கள் கீழே விழுந்து தினந்தோறும் காயங்களுடன் செல்லும் நிலையும் உள்ளது. எனவே பணிகள் முடிந்த நிலையில் கடந்த நான்கு மாதங்களாகியும் சீரமைக்காமல் உள்ள மில் ரோடு சாலையை சீரமைக்க கோரி அந்த பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து அந்த பகுதி பொதுமக்கள் கூறுகையில், சுமார் 300 க்கும் மேற்பட்ட கடைகள் மற்றும் வீடுகள் உள்ளது. இந்த பகுதியில் பாதாள சாக்கடை திட்ட பணிக்காக சாலைகள் தோண்டப்பட்டு குண்டும், குழியுமாக உள்ளதால்,அடிக்கடி விபத்து ஏற்படுவதோடு,சாலையில் பரவும் தூசியால் கடைகளில் உள்ள இலட்சக்கணக்கான மதிப்புடைய பொருட்கள் சேதமடைவதாக தெரிவித்தனர். மேலும் சாலையை சரி செய்ய மாநகராட்சி மற்றும் நெடுஞ்சாலைத்துறை என சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை கோரிக்கை விடுத்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் இல்லை. எனவே அதிகாரிகள் சாலையை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். தவறும் பட்சத்தில் இப்பகுதி மக்கள் ஒன்று திரண்டு சாலையில் அமர்ந்து போராட்டம் நடத்தவும் தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளனர்.



# கோவையில் பெண் ஒருவருக்கு ஆம்புலன்ஸ் வாகனத்திலேயே பிரசவமாகியுள்ளது

கோவை, ஆகஸ்ட் 15 2021: கோவை தொண்டாமுத்தூரை அடுத்த கலிக்கநாயக்கன் பாளையம் பகுதியை சேர்ந்தவர் அழகு (25). கர்ப்பிணியான இவருக்கு காலை பிரசவ வலி ஏற்பட்டது.

இதையடுத்து 108 ஆம்புலன்ஸ் வாகனத்திற்கு தகவல் அளிக்கப்பட்டது. ஆம்புலன்ஸ் அங்கு சென்ற போது அந்த பெண்ணுக்கு அதீத பிரசவ வலி ஏற்பட்டது. அவசர நிலையை உணர்ந்த ஆம்புலன்ஸ் ஊழியர்கள் ரகு, சதீஸ்குமார் மற்றும் மருத்துவ நுட்ப நிபுணர் பிரபு ஆகியோர் பெண்ணுக்கு ஆம்புலன்ஸ் வாகனத்திலேயே பிரசவம் பார்த்தனர்.



அப்போது அந்த் பெண்ணுக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. தொடர்ந்து தாயும் சேயும் கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவசர நிலையை உணர்ந்து தாயையும், சேயையும் காப்பாற்றிய 108 ஆம்புலன்ஸ் ஓட்டுநர்களுக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகிறது.

# கோவை மாவட்டம் அன்னூர் ஒட்டர்பாளையத்தில் கிராம உதவியாளர் முத்துச்சாமி காலில் விழுந்த விவகாரத்தில் திடீர் திருப்பம்

கோவை, ஆகஸ்ட் 15 2021: கோவை மாவட்டம் அன்னூர் ஒட்டர்பாளையத்தில் கிராம உதவியாளர் முத்துச்சாமி காலில் விழுந்த விவகாரத்தில் திடீர் திருப்பம். கிராம உதவியாளர் முத்துச்சாமி, அலுவலகத்தில் வைத்து விவசாயி கோபால்சாமி தகாத வார்த்தையில் பேசி தாக்கும் காட்சிகள் வெளியானது

விவசாயி கோபால்சாமியின் காலில் கிராம உதவியாளர் முத்துச்சாமி வெளியான காட்சிகள் மட்டும் முதலில் வெளியான நிலையில் இது குறித்து விசாரணை நடத்திய வருவாய் துறை அதிகாரிகள் மாவட்ட ஆட்சியரிடம் அறிக்கை அளித்தனர். மாவட்ட ஆட்சியர் உத்திரவு படி விவசாயி மீது வன்கொடுமை வழக்கு மற்றும் அரசு அதிகாரிகளை பணி செய்ய விடாமல் தடுத்ததாகவும் இரு வழக்குகள் அன்னூர் காவல் துறையினர் பதிவு செய்தனர். கிராம உதவியாளர் முத்துச்சாமி விவசாயி கோபால்சாமியை தாக்கியதற்கு ஆதாரம் இல்லை எனவும் தெரிவித்திருந்தனர். இந்நிலையில் தற்போது கிராம உதவியாளர் முத்துச்சாமி விவசாயி கோபால்சாமியை தாக்கும் வீடியோ காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# கோவையில் 75 ம் ஆண்டு சுதந்திர தின விழாவை ஒட்டி கோவை மாநகர் பாஜக சார்பில் போட்டிகள் நடத்த திட்டமிடபட்டுள்ளது

கோவை, ஆகஸ்ட் 15 2021: கோவையில் 75 ம் ஆண்டு சுதந்திர தின விழாவை ஒட்டி கோவை மாநகர் பாஜக சார்பில் ஆகஸ்ட் 15 ஆம் தேதி 25 மண்டல்களிலும் பேச்சு போட்டி, கட்டுரை போட்டி, வினாடி வினா உள்ளிட்ட போட்டிகள் நடத்த திட்டமிடபட்டுள்ளது. 75வது சுதந்திர தின பவள விழாவை கொண்டாடுவது குறித்த செய்தியாளர் சந்திப்பு கோவை பி கே கே மேனன் சாலையில் அமைந்துள்ள கோவை மாவட்ட பாஜக தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது அப்போது செய்திகளை சந்தித்த கோவை மாவட்ட இளைஞரணி தலைவர் மகேஷ் குமார், சுதந்திர தின விழாவையொட்டி யுவ சங்கல்ப யாத்ரா எனப் பெயரிடப்பட்ட சைக்கிள் யாத்திரை தமிழகத்தில் மூன்று மாவட்டங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக கூறினார். மேலும், ஆகஸ்ட் 15 ஆம் தேதி அன்று 25 மண்டல்களிலும் பேச்சு போட்டி, கட்டுரை போட்டி, வினாடி வினா உள்ளிட்ட போட்டிகள் மூன்று மாத இடைவெளியில் பாஜக சார்பில் நடத்த உள்ளதாகவும் அவர் கூறினார்.




# டிஐ சைக்கிள்ஸ் அறிமுகப்படுத்தும் மோன்ட்ரா சிட்டி அன்பிளக்டு குறைந்த தூரப் பயணத்திற்கான மிகச்சிறந்த இ-சைக்கிள்

சென்னை, ஆகஸ்ட் 15, 2021: டிஐ சைக்கிள்ஸ் ஆஃப் இந்தியா-வின் உயர் திறன் கொண்ட பைக் பிராண்டான மோன்ட்ரா, குறைந்த தூரப் பயணத்தை வசதியானதாக, சௌகரியமானதாக மாற்றும் வகையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட தங்களது முதலாவது எலக்ட்ரிக் பைக்கை அறிமுகப்படுத்தியுள்ளது. ரூ.27,279 விலையில் விற்பனையாகவுள்ள இந்த இ-பைசைக்கிள், தினசரி பயணத்திற்கான மலிவு விலையிலான, பயனுள்ள உயர்தர தீர்வாக அமையும். இந்த அறிமுகத்துடன், பொதுப்போக்குவரத்திற்காக காத்திருப்பதில் உள்ள அசௌகர்யங்களில் இருந்தும், குறைந்த தூரம் பயணிக்கையில் பார்க்கிங் செய்வதிலுள்ள பிரச்சனைகளில் இருந்தும் விடுவித்து ஒருவர் தான் செல்ல வேண்டிய இடத்திற்கு சௌகரியமாகப் பயணிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது மோன்ட்ரா. மோன்ட்ரா இ-பைசைக்கிள் அறிமுகம் குறித்து ட்யூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆஃப் இந்தியாவின் நிர்வாக இயக்குனர் வெள்ளையன் சுப்பையா பேசுகையில், "குறைந்த தூரப் பயணப் பிரிவானது, பெரும்பாலும் பொதுப்போக்குவரத்தின் மீதான விருப்பத்தையும் அது கிடைப்பதையும் பொறுத்தமைகிறது. மோன்ட்ரா இ-பைசைக்கிள் அறிமுகத்துடன், பயணத்திற்காக வெகுநேரம் காத்திருப்பதில் இருந்து வாடிக்கையாளர்களை விடுவிக்க விரும்புகிறோம். மின் போக்குவரத்துதான் எதிர்காலம் என்றான நிலையில், நகர்ப்புற பயணிகளிடையே இ-பைசைக்கிள் மிக விருப்பமான தீர்வாக அமையும். சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில், இந்தியாவின் இ-சைக்கிள் சந்தையானது 2026-ல் 12.69 சதவிகிதம் சிஏஜிஆரில் 2.08 மில்லியன் அமெரிக்க டாலர்களாக வளருமென்று தெரியவந்துள்ளது; இது குறிப்பிடத்தக்க அளவில் மிகப்பெரிய, இதுவரை பயன்படுத்தப்படாத திறனாகும். எப்போதும் வாடிக்கையாளரை மையப்படுத்திய பிராண்டாக இருந்துவரும் மோன்ட்ரா, இந்தியாவிலேயே முதன்முதலாக எலக்ட்ரிக் சைக்கிள்கள் உருவாக்கத்தில் கார்பன் சட்டகத்தைப் பயன்படுத்துகிறது; இதனால் எடை குறைவாகவுள்ள இந்த சைக்கிள்கள் விரைவான மென்மையான எளிதான போக்குவரத்தை வழங்குகின்றன. எங்களது புதிய மோன்ட்ரா இ-பைசைக்கிள் மூலமாக, தினமும் சிறிய தொலைவுக்குப் பயணிப்பதில் தரத்தை எதிர்பார்க்கும் எங்களது வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்த முடியுமென்பதில் உறுதியாக இருக்கிறோம்" எனத் தெரிவித்தார்.

# மேட்டுப்பாளையம் அருகே இளைஞரைக் கொல்ல முயன்ற 7 பேர் கைது

கோவை, ஆகஸ்ட் 15 2021: மேட்டுப்பாளையம் அருகே பெத்திக்குட்டையில் இளைஞரைக்கொலை செய்ய முயன்ற 7 பேரை சிறுமுகை காவல் துறையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர். சிறுமுகை காமராஜ் நகரைச் சேர்ந்தவர் துரைசாமி மகன் குட்டி(எ)வீராசாமி(23) கூலி தொழிலாளி இவர் தனது நண்பர்களான அறிவொளி நகரைச்சேர்ந்த அக்பர் அலி மகன் அபு(23) ஆலாங்கொம்பு பகுதியைச்சேர்ந்த ரவிக்குமார் மகன் கார்த்திக்(23) காரமடை சேரன் நகரைச்சேர்ந்த ஷாஜகான் மகன் அன்சர்(21) மேட்டுப்பாளையம் குமரபுரத்தைச்சேர்ந்த ஆனந்தகுமார் மகன் கோகுல்(17) மேட்டுப்பாளையம் சாந்தி நகர் பகுதியை சேர்ந்த சலீம் மகன் சஜீர்(20) சிறுமுகையைச் சேர்ந்த முருகேசன் மகன் சுள்ளான்(எ)சுபாஷ்(23) ஆகியோருடன் சேர்ந்து சிறுமுகை அருகிலுள்ள பெத்திக்குட்டை பகுதியில் உள்ள ஒரு உணவகத்தில் சாப்பிட சென்றுள்ளனர். முன்விரோதம் காரணமாக இவர்கள் மேட்டுப்பாளையம் அறிவொளி நகரைச் சேர்ந்த முகமது அலி மகன் பாபு(எ)பிளாக்பாபுவை(33) கொலை செய்யத்திட்டம் தீட்டி உள்ளனர்.இவர் பிரபல ரௌடி என தெரியவருகிறது.இதையடுத்து பிளாக்பாபுவை தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு சமாதானமாக போகலாம் என்று கூறி சாப்பிட வருமாறு பெத்திக்குட்டைக்கு வரவழைத்துள்ளனர். இதையடுத்துபிளாக் பாபு தனது நண்பரான பெரியகள்ளிப்பட்டியைச் சேர்ந்த பழனிசாமி மகன் ஆனந்து(25) என்பவருடன் சேர்ந்து பெத்திக்குட்டைக்கு வந்துள்ளார். அப்போது மேற்கண்ட 7 பேரும் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களால் திடீரென பிளாக்பாபுவை தாக்க முயற்சித்துள்ளனர்.இதில் சுதாரித்து கொண்ட பிளாக்பாபு சிறுகாயங்களுடன் அங்கிருந்து தப்பித்து சிறுமுகை காவல் நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளார்.பெத்திக் குட்டை பகுதியில் பட்டப்பகலில் ஆயுதங்களுடன் இளைஞர்கள் சிலர் சண்டை போட்டுக் கொள்வதைக்கண்ட அப்பகுதி மக்கள் அதிர்ச்சியடைந்தனர், பிளாக் பாபு, ஆனந்து ஆகியோர் அளித்த புகாரின் பேரில் மேற்கண்ட 7 பேரையும் சிறுமுகை காவல் ஆய்வாளர் தவமணி,உதவி ஆய்வாளர்கள் ராஜ்பிரபு, லெனின், மற்றும் போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.



# பொள்ளாச்சி பாலியல் வழக்கின் ஒன்பதாவது குற்றவாளி கைது நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் சி பி ஐ வழக்கினை விரைந்து முடித்து வைக்க தீவிர நடவடிக்க

கோவை, ஆகஸ்ட் 15 2021: கோவை பாலியல் வன்கொடுமை வழக்குகளில் இந்தியாவையே உலுக்கிய பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் சுமார் 200 பெண்கள் பாதிக்கப்பட்டதாக தெரிகின்றன. இந்த நிலையில் இந்த வழக்கு தொடர்பாக சிபிஐ அதிகாரிகள் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கையின் அடிப்படையில் 9-வது நபராக அருண் கைது செய்யப்பட்டுள்ளான். பாலியல் வழக்கில் முன்னதாக கைதான சதீஷின் துணிக்கடை பங்குதாரராக இருந்ததாகக் கூறப்படும் அருண் குற்ற சம்பவங்களில் ஈடுபட்டது சிபிஐ அதிகாரிகளுக்கு தெரிய வந்திருக்கின்றன. அதனடிப்படையில் அருணை கைது செய்து சிறையில் அடைத்திருக்கும் சிபிஐ அதிகாரிகள் இவ்வழக்கை விரைந்து முடிக்க தீவிரம் காட்டி இருக்கின்றன,,, இந்த வழக்கில் திருநாவுக்கரசு சதீஷ் சபரி ராஜன் வசந்தகுமார் மணிகண்டன் ஹேரன்பால் பாபு அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட அருளானந்தம் ஆகிய எட்டுபேர் கைதான நிலையில் ஒன்பதாவதாக அருண் கைது போலீசிடம் கைதான நிலையில் இவ்வழக்கை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொண்டு இருக்கின்றன. அருணிடம் போலீசார் நடத்தப்படும் விசாரணையின் அடிப்படையில் கைது செய்யப்படாமிலிருக்கின்ற குற்றவாளிகள் கைது செய்யப்படுவார்கள் என போலீஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# பெரியகுளம் டி கள்ளிப்பட்டியில் விவசாயிகள் போராட்டம்



தேனி, ஆகஸ்ட் 15 2021: தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே டி.கள்ளிபட்டி கிராம ஆதிதிராவிடர் சிறுகுறு விவசாயிகள் நல சங்கம் சார்பாக ஆண்டியப்பன் தலைமையில் மற்றும் செயலாளர் காமராஜ் பொருளாளர் செல்லப்பாண்டி ஆகியோர் தாமரைக்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் உறுப்பினராக மறுப்பது சம்பந்தமாக இச்சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட தண்டபாணியிடம் மனு கொடுக்கும்போது இங்கு யாரையும் உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. என கூறியதை அடுத்து அனைவரும் சேர்ந்து துணை ஆட்சியரிடம் மனு கொடுத்தனர். இந்நிகழ்வில் 100க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# பாதிராப்புலியூர் ஸ்ரீ சோலை வாழியம்மன் கோவிலில் மஹோற்சவ விழா



திண்டிவனம், ஆக. 15 2021: விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், பாதிராப்புலியூர் கிராமத்தில் உள்ள ஸ்ரீ சோலை வாழி மாரியம்மன் கோவிலில் மஹோற்சவம் நடந்தது. விழுப்புரம் மாவட்டம், பாதிராப்புலியூர் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சோலை வாழி அம்மன், சிவன், மலையாளத்தார், வீரபத்திரன், காளியப்ப சுவாமிகளுக்கு சாகை வார்த்தல் உற்சவம் நடந்தது. இதனையொட்டி 13ம் தேதி காலை 9 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் அபிஷேக, ஆராதனை செய்து சக்தி கரகமும், சிவன், மலையாளத்தார், வீரபத்திரன், காளியப்பன் சுவாமிகளுக்கு மஞ்சள் கொடி உடுத்தி, மாலையும் தரித்து, பிற்பகல் 2 மணிக்கு மேல் பூங்கரகமும், அதனைத் தொடர்ந்து இரவு அம்மன் முத்துப் பல்லக்கில் வாணவேடிக்கையுடன் வீதி உலாவும், மறுநாள் 14ம் தேதி சனிக்கிழமை இரவு 10 மணிக்கு மேல் தெருக் கூத்தும் நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை பாதிராப்புலியூர் கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

# மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே 15பி மேட்டுப்பட்டியில் பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள் கூட்டம்



மதுரை, ஆகஸ்ட் 15 2021: மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே 15பி மேட்டுபட்டியில் பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள் கூட்டம் பாரதிய ஜனதா மீனவரணி மாநில செயலாளர் சண்முகனானந்தம் தலைமையில் புறநகர் மாவட்ட தலைவர் மஹா.சுசீந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பாரத பிரதமரின் இலவச அரிசி பற்றியஅந்தயோஜனா திட்டம், அனைவர்க்கும் வீடு உள்ளிட்ட திட்டங்கள் பற்றி பொதுமக்களுக்கு கொண்டு சேர்ப்பது குறித்து விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட பொதுச்செயலாளர் கோவிந்த மூர்த்தி, பாலமேடு ஒன்றிய தலைவர் தங்கதுரை அலங்காநல்லூர் ஒன்றிய தலைவர் சுபாஷ் சந்திரபோஸ்உள்ளிட்ட பாஜக நிர்வாகிகள் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்-ல்
கோர்ட் நோட்டீஸ்,
காணவில்லை, பெயர் மாற்றம்
விளம்பரம்
குறைந்த கட்டணம்

# கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெறக் கூடிய வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.எஸ்.அனீஷ் சேகர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்





மதுரை, ஆகஸ்ட் 15 2021: மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம்இ தும்பைபட்டி கிராமத்தில் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ்இ ரூபாய் 3 இலட்சம் மதிப்பீட்டில் மரக்கன்று நடும் பணியையும்இ ரூபாய் 5 இலட்சம் மதிப்பீட்டில் உப்பிலகுடி கண்மாய் தூர்வாரும் பணியையும்இ பிரதான் மந்திரியின் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின்கீழ்இ ரூபாய் 3.40 இலட்சம் மதிப்பீட்டில் 2 நபர்களுக்கு வீடு கட்டப்பட்டு வரும் பணியையும்இ ஜல் ஜுவன் மிஷன் திட்டத்தின்கீழ் ரூபாய் 10.10 இலட்சம் மதிப்பீட்டில் 101 வீடுகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டப்பணிகளையும் அட்டப்பட்டி கிராமத்தில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின்கீழ் ரூபாய் 4 இலட்சம் மதிப்பீட்டில் மீனாட்சிபுரம் சாவடி கட்டடப் பணிகளையும் மற்றும் ஜல் ஜுவன் மிஷன் திட்டத்தின்கீழ் ரூபாய் 6.34 இலட்சம் மதிப்பீட்டில் 25 வீடுகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டப்பணிகளையும் பார்வையிட்டார்.

மேலும் கொடுக்காம்பட்டி கிராமத்தில் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் ரூபாய் 22.65 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற கட்டடம் கட்டும் பணியையும் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி திட்டத்தின்கீழ் ரூபாய் 15.50 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளி கட்டடம் கட்டும் பணியையும் ரூபாய் 1.35 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு நபருக்கு 2 மாடுகள் கட்டுவதற்கான மாட்டுக்கொட்டகை அமைக்கும் பணியையும் மற்றும் 20 ஆடுகள் கட்டுவதற்கான ஆட்டுக்கொட்டகை அமைக்கும் பணியையும் சுக்காம்பட்டி கிராமத்தில் பிரதமமந்திரி கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 308.81 இலட்சம் மதிப்பீட்டில் சுக்காம்பட்டியில் இருந்து லட்சுமிபுரம் வழியாக ஆவாரங்காடு செல்லும் சாலை அமைக்கும் பணியையும் கருங்கலக்குடி கிராமத்தில் 21 இலட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை மையம் அமைக்கும் பணியையும் மற்றும் கொட்டாம்பட்டி கிராமத்தில் 21 இலட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை மையம் அமைக்கும் பணியையும் பார்வையிட்டார்.

தொடர்ந்து சொக்கலிங்கபுரம் கிராமத்தில் பிரதான் மந்திரியின் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் ஒரு நபருக்கு ரூபாய் 1.70 இலட்சம் மதிப்பீட்டில் வீடு கட்டப்பட்டு வரும் பணியையும் மற்றும் கொட்டாம்பட்டி கிராமத்தில் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் ரூபாய் 1.53 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு நபருக்கு 10 ஆடுகள் கட்டுவதற்கான ஆட்டுக்கொட்டகை அமைக்கும் பணியையும் சொக்கலிங்கபுரம் கிராமத்தில் ரூபாய் 24.30 இலட்சம் மதிப்பீட்டில் தோப்புசாலை முதல் வயக்காகாரன்சியம்மன் கோவில் வரை சாலை அமைக்கும் பணியையும் கொட்டாம்பட்டி கிராமத்தில் பசுமை வீடு கட்டும் திட்டத்தின்கீழ் ரூபாய் 2.10 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு நபருக்கு வீடு கட்டும் பணியையும் பள்ளபட்டி கிராமத்தில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின்கீழ் ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் அமைக்கப்பட்டு வரும் பணியையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

இந்த ஆய்வில் கொட்டாம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.செல்லப்பாண்டி அவர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

# தூத்துக்குடி கனரா வங்கி மண்டல அலுவலகம்சார்பில் 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டுரத்ததான முகாம் நடைபெற்றது



தூத்துக்குடி ஆக 15 2021: இந்திய திருநாட்டின் 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் செந்தில்ராஜ் ஆலோசனையின் பேரில் தூத்துக்குடி கனரா வங்கியின் மண்டல அலுவலகம் சார்பில் மண்டல மேலாளர் சீனா எஸ் தேவ் தலைமையில் ரத்ததான முகாம் நடைபெற்றது

இந்த ரத்ததான முகாமில் தூத்துக்குடி கனரா வங்கியின் மண்டல அலுவலகத்திற்கு உட்பட்ட சிதம்பர நகர். பீச் ரோடு. மட்டகடை. போர்ட். மேலூர். டி டி பி எஸ். நந்த கோபாலபுரம். கொற்கை. ஆறுமுகநேரி. உட்பட 15 கனரா வங்கி கிளைகளின் மேலாளர்கள் மற்றும் ஊழியர்கள் பொதுமக்கள் உட்பட ஏராளமானவர்கள் தன்னார்வத்துடன் அரசு மருத்துவமனைக்கு வழங்கக்கூடிய வகையில் நடந்த ரத்தம் தான முகாமில் கலந்து கொண்டு ரத்த தானம் வழங்கினர்.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி அரசு மருத்துவமனை டாக்டர் சாந்தி.கனரா வங்கியின் கோட்ட மேலாளர்கள். ரவீந்திரன்ஜேம்ஸ். அனில் குமார். பீச் ரோடு முதன்மை மேலாளர் கோபிகண்ணன். முதன்மை மேலாளர் ரமேஷ் பிரபு. கனரா வங்கியின் மேலாளர்கள் மீரா ஷீபா. ராஜா மகேந்திரன். குருபாலன். நாகேஷ். விவசாயப் பிரிவு மேலாளர் ரெங்க லட்சுமி. மாரிச்செல்வி உட்பட கனரா வங்கியின் ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் இந்த ரத்ததான முகாமில் கலந்து கொண்டனர்.

# ஊரக வேளாண்மை செயல்முறை பயிற்சி



விக்கிரவாண்டி, ஆக. 15 2021: அனந்தபுரத்தில் விவசாயிகளுக்கு விதை நேர்த்தி குறித்த செயல்முறை விளக்க பயிற்சி நடந்தது.

விக்கிரவாண்டி தாலுகா அனந்தபுரம் , வேளாண்மை கூட்டுறவு வங்கி வளாகத்தில் கோயம்புத்தூர் காருண்யா வேளாண்மை பல்கலைகழக மாணவர்கள் பங்குபெற்ற செயல்முறை விளக்க பயிற்சிக்கு பேரூராட்சி செயல் அலுவலர் விஸ்வநாதன் தலைமை தாங்கினார். விவசாயிகளுக்கு தங்களது வயல்களில் சாகுபடி செய்யும் நெல் மற்றும் வேளாண்மை பொருட்களை சாணம், கோமியம், சுண்ணாம்பு, வரப்பு மண் மற்றும் நீர் கொண்டு உயிர் கரைசல் என்னும் பீஜாமிர்தம் தயாரித்து அதில் விதை நேர்த்தி செய்வது குறித்த செயல்முறை விளக்க பயிற்சி அளித்தனர் . பல்கலைகழக இறுதியாண்டு மாணவ, மாணவிகளான அட்சயா, செல்ஷியா, தர்ஷிணி, ரின்சி, ஜெனி , பிரகாஷ் மிதுன், அரவிந்த் ,ஜோதிராமலிங்கம் ஆகியோர் கொண்ட குழுவினர் விவசாயிகளுக்கு செயல்விளக்கமளித்தனர்.

அனந்தபுரம் கிராம முன்னோடி விவசாயிகள் செயல்விளக்க பயிற்சியில் பங்கேற்றனர். விக்கிரவாண்டி தாலுகா அனந்தபுரத்தில் வேளாண்மை பல்கலைகழக மாணவர்களின் விவசாய செயல்விளக்க பயிற்சி நடந்தது.

# போளூர் அருகே காரும் லாரியும் நேருக்கு நேர் மோதல் 3 மாத குழந்தை உட்பட 6 பேர் பலி ரூ 5 பேர் படுகாயம்



வேலூர், ஆகஸ்ட் 15 2021: வேலூர் மாவட்டம், விருபாட்சிபுரம் - ஒரே குடும்பத்தை சேர்ந்த, 11 பேர், மாருதி சுசுகி காரில், திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் புதூர் மாரியம்மன் குல தெய்வ கோவிலிற்கு, இன்று வேலூர் ஸ்ரீ திருவண்ணாமலை சாலையில், சென்று கொண்டிருந்தனர். சந்தவாசல் அடுத்த முனியந்தாங்கல் கூட்ரோடு அருகே வரும் போது திடீரென காரின் டயர் வெடித்ததில், கார் கட்டுப்பாட்டை இழந்து சாலையில் தாறு மாறாக ஓடியது. அப்போது, திருவண்ணாமலையிலிருந்து, வேலூர் நோக்கி சென்று கொண்டிருந்த லாரி மீது எதிர் பாராத விதமாக கார் மோதியது.

காரில் பயணம் செய்த கோமதி(26), முனியம்மாள்(60), பரிமளா(21), ராதிகா(45), மூர்த்தி(68), நிஷா(3) மாத பெண் குழந்தை, என நான்கு பெண்கள், ஒரு ஆண், மூன்று மாத குழந்தை என ஆறு பேர் சம்பவ இடத்திலேயே பலியாயினர்.

மேலும், மாலதி(27), பூர்ணிமா(35), கலா(36), கார் டிரைவர் சசிக்குமார், (25), குமரன்(3) மாத ஆண் குழந்தை உள்பட, ஐந்து பேர் காயமடைந்து சிகிச்சைக்காக, வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

திருவண்ணாமலை மாவட்ட எஸ்பி பவன்குமார் ரெட்டி, ஆரணி கோட்டாச்சியர் கவிதா ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து ஆய்வு மேற்கொண்டார். இது குறித்து கண்ணமங்கலம் இன்ஸ்பெக்டர் சசிகுமார் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்து வருகிறார்.

# ராமநாதசுவாமி கோயிலை பக்தர்கள் தாஜீசனம் செய்ய அனுமதிக்ககோரி இந்து முன்னனி சார்பில் ராமேசுவரம் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்



ராமேசுவரம், ஆக. 15 2021: ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயிலில் ஆடி திருக்கல்யாண திருவிழா ராமநாதசுவாமி,பர்வதவர்த்தினி அம்பாள் திருக்கல்யாணம் திருக்கல்யாண மண்டபத்தில் வியாழக்கிழமை இரவு நடைபெற்றது. ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம் ராமநாதசுவாமி திருக்கோயிலில் ஆடி திருக்கல்யாணம் திருவிழா கடந்த ஆக 01 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. ஆன்று முதல் நாள் தோறும் சுவாமி, அம்பாளுக்குசிறப்பு அலங்காரம் மற்றும் பூஜைகள் தீபாரதணைகள் நடைபெற்றது. திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியாக திருக்கல்யாணம் வியாழக்கிழமை இரவு கோயில் திருக்கல்யாண திருமண மண்டபத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்து மேடையில் ராமநாதசுவாமி, பர்வதவர்த்தினி அம்பாள் அலங்காரத்தில் அமர்த்தப்பட்டு திருமண நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதன் பின் கோயில் குருக்கல் தலைமையில் ராமநாதசுவாமி, பர்வதவர்த்தினி அம்பாள் திருக்கல்யாணம் நடைபெற்றது. இதன் பின் தீபாரதணை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு பக்தர்கள் அனுமதிக்கப்படவில்லை, மேலும் திருக்கல்யாண நிகழ்ச்சியாக கான சமூக வளைதங்களில் ஏற்பாடுகள் செய்திருந்தனர். இதில், ராமநாதசுவாமி கோயில் இணை ஆணையர் பழனிக்குமார், தக்கர் குமரன்சேதுபதி, மேலாளர் சீனிவாசன், கண்காணிப்பாளர் பாலசுப்பரமணியன், பேஸ்கார்கள் கமலநாதன், நாகராஜ், அண்ணாத்துரை, கலைச்செல்வம், மற்றும் கோயில் பணியாளர்கள் கலந்துகொண்டனர். ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயிலில் திருக்கல்யாண மண்டபத்தில் ராமநாதசுவாமி, பர்வதவர்த்தினி அம்பாள் திருக்கல்யாணம் வியாழக்கிழமை நடைபெற்றது.

# ராமநாதசுவாமி கோயிலில் பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதிக்ககோரி இந்து முன்னனி ஆர்ப்பாட்டம்



ராமேசுவரம், ஆக.15 2021: ராமேசுவரம்ராமநாதசுவாமி கோயிலில் பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதிக்கோரி இந்து முன்னனி சார்பில் பேருந்து நிலையம் மன்பு ஆர்ப்பாட்டத்தில் வியாழக்கிழமை ஈடுபட்டனர்.

ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயில் இந்துக்களில் தீர்த்த மூர்த்தி ஸ்தலமாக விளங்கி வருகிறது. இந்த கோயிலில் கரோனா நோய் பரவல் மூன்றாம் அலை காரணமாக பக்தர்கள் தரிசனம் செய்ய தடை செய்யப்பட்டது. இதனால் பக்தர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். கோயிலில் பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதி தடை செய்யப்பட்டுள்ளதால் ராமேசுவரம் பொருளாதாரத்தில் கடுமையாக பாதிப்படைந்துள்ளது. இதனால் இங்குள்ள தொழிலாளர்கள் வேலையின்றி தவித்து வருகின்றனர். இதனால் தமிழக அரசு கோயில் திறந்து பக்தர்கள் கரோனா கட்டுப்பாடுகளை கடைபிடித்து தரிசனம் செய்யவும், கோயிலுக்குள் உள்ள தீர்த்த கிணறுகளில் பக்தர்கள் நீராட அனுமதி அளிக்க வேண்டும் என்பதை வலியுருத்தி இந்து முன்னனி சார்பில் பேருந்து நிலையம் மன்பு ஆர்ப்பாட்டத்தில் வியாழக்கிழமை ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில், இந்து முன்னணி மாவட்ட பொதுச் செயலாளர் கே இராமமூரர்த்தி தலைமை வகித்தார். பாஜக மாவட்டத்தலைவர் கே.முரளிதரன் முன்னிலை வகித்தார். மாவட்ட செயலாளர; ராஜசேகர், நகர தலைவர்; நம்புராஜன் பாஜக மாவட்ட பொதுச்செயலாளர; சுந்தர முருகன் பாஜக நகர தலைவர; இராமநாதன் நகர பொதுச் செயலாளர் காரத்திக் இந்து ஆட்டோ முன்னணி மாவட்ட செயலாளர் குமார் ஒன்றிய தலைவரர் காளீஸ்வரன் ஆகியோர் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

# மண்டபம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படை பாட்டில் வீசி தாக்குதல் மீனவர் மண்டை உடைப்பு: மீனவர் படுகாயம்



ராமேசுவரம்,ஆக.15 2021: மண்டபத்தில் இரந்து மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் பாட்டில் வீசி மீனவர் மண்டை உடைப்பு உயிர் தப்பிய மீனவர்கள் வியாழக்கிழமை காலையில் திரும்பினர்.

ராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் இருந்து புதன்கிழமை 410 விசைப்படகுகளில் இரண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்வளத்துறை அனுமதி பெற்று மீன் பிடிக்க சென்றனர். இந்திய எல்லைப்பகுதியில் நள்ளிரவு மீன்பிடித்துக்கொண்டிருக்கும் போது அங்கு 5 அதிவேக படகில் வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியதுடன் மீனவர்களை குறி வைத்து பாட்டிலால் படகு மீது வீசினர். இதில், அந்தோணி, ஜெபஸ்டின், சார;லஸ், பிரசாந்த், ரத்தினம், நம்புமாரி ஆகியோரது படகுகள் தாக்குதலில் இருந்து தப்பிக்க தங்களது படகுகளில் இருந்த மீன்பிடி வலைகளை அறுத்து தள்ளி விட்டு கரை திரும்பினர;. இலங்கை கடற்படை தாக்குதலில் தங்கச்சிமடம் அந்தோணி பிரஷாந்த் விசைப்படகில் சென்ற பாம்பன் மீனவர; செல்வம் (35) மண்டை உடைத்து ரத்த காயத்துடன் வியாழக்கிழமை அதிகாலை கரை திரும்பினர் மேலும் மண்டபம் தனியார் மருத்துவமனையில் தையல் போட்டுக்கொண்டு வீடு திரும்பினர். இதன் பின்னர் மீன்வளத்துறை மற்றும் கடலோர பாதுகாப்பு முழுக காவல்துறையினரிடம் புகார் அளித்தனர். மண்டபம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்திய சம்பவம் மீனவர்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது.

Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

HELLO Mirror MADRAS
hellomadrasdaily@gmail.com
R.DIS No: 60/2021
Daily Morning Newspaper
The Truth

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

VOLUME - 1 | CHENNAI | DAILY | 4 Pages | Sunday, August 15, 2021 | Rs.2/- | ISSUE - 32

# President's Medals awarded to Fire Service, Home Guards (HG) and Civil Defence (CD) personnel on the occasion of Independence Day, 2021

New Delhi, August 15 2021: President's medal for Gallantry and President's medal for distinguished services as well as gallantry medal and meritorious services medals are awarded to the personnel of Fire Services, Civil Defence & Home Guards on Republic Day and Independence Day each year.

On the occasion of Independence Day, 2021, 86 personnel have been awarded Fire Service Medals.

Out of these, Fire Service Medal for Gallantry is awarded to 26 personnel for their respective acts of valour and gallantry.

President's Fire Service Medal for Distinguished Service is awarded to 10 personnel and Fire Service Medal for Meritorious Service is awarded to 50 personnel for their respective distinguished and meritorious records of services.

In addition, 55 personnel are also awarded Home Guard & Civil Defence Medals on the occasion of the Independence Day, 2021. Of these, President's Home Guards and Civil Defence Medal for Distinguished Service and Home Guards and Civil Defence Medal for



Meritorious Service are awarded to 05 personnel and 50 personnel respectively.

The list of Fire Service Medals and Home Guards & Civil Defence Medals awardees are enclosed as Annexure.

# NTPC invites global EOI to set up pilot project on Hydrogen Blending with Natural Gas in City Gas Distribution

New Delhi, August 15 2021: NTPC Limited, India's largest integrated power generating company under Ministry of Power has floated a global Expression of Interest (EoI) to set up a Pilot Project on Hydrogen Blending with Natural Gas in City Gas Distribution (CGD) Network in India.

The EoI follows the recent tenders floated by NTPC REL for green hydrogen fuelling station at Leh and NTPC VidyutVyapar Nigam Limited (NVVN) for procurement of Fuel Cell Buses. A dedicated 1.25 MW Solar plant is also being set up at Leh by NTPC REL to power the hydrogen fuelling station.

This pilot on hydrogen blending with natural gas will be the first of its kind in India and would explore the viability of decarbonizing India's natural gas grid. NTPC is keen on playing a key role in India's transition to hydrogen economy would later take this up at a commercial scale across India. The successful execution of the pilot will also demonstrate the decarbonization objective along with import substitution aim under the government's 'AatmaNirbhar Bharat Abhiyaan'.

NTPC Limited is also keenly exploring production of green ammonia to decarbonize the fertilizer industry and possibly fulfil




government's upcoming mandate of using certain percentage of green hydrogen in fertilizer and refinery sector.

Also, detailed study on green methanol production at Ramagundam has been completed and the company is expected to take final investment decision in the near future.

# BRICS Partnership for Strengthening Agro Biodiversity for Food and Nutrition Security

New Delhi, August 15 2021: The Ministers of Agriculture of the Federative Republic of Brazil, the Russian Federation, the People's Republic of China and the Republic of South Africa deliberated virtually on the theme "BRICS Partnership for Strengthening Agro Biodiversity for Food and Nutrition Security".

The implementation of the UN 2030 Agenda for Sustainable Development noted that BRICS countries are well positioned to take a leading role in helping to achieve the objectives of the 2030 Sustainable Development Goals to eradicate hunger and poverty. The strong agricultural research base in BRICS countries and the need to harness and share knowledge, facilitate transfer of technologies from lab to land to provide improved solutions for enhanced productivity, especially in the face of climate change, maintaining agro biodiversity and ensuring sustainable use of natural resources was acknowledged.

BRICS (Brazil, Russia, India, China, and South Africa) Agriculture Research Platform has been developed by India to promote cooperation in the areas of




producers and processors was also expressed.

The Joint declaration of the eleventh meeting of BRICS and Action Plan for 2021-24 for agricultural cooperation of BRICS countries and BRICS Agriculture Research Platform were discussed in

Farmers Welfare and Ms. Alaknanda Dayal, Joint Secretary, Ministry of Agriculture & Farmers Welfare attended the virtual meeting of the BRICS working group held on 12 -13 August 2021 at Sushma Swaraj Bhawan, New Delhi.

# Vice President greets the nation on the eve of 75th Independence Day

New Delhi, August 15 2021: The Vice President, Shri M. Venkaiah Naidu has greeted the nation on the eve of Independence Day. Following is the full text of his message -

"I extend my warm greetings and good wishes to the people of our country on the joyous occasion of our Independence Day.

As we enter our 75th year of Independence, let us recall the countless, valiant sacrifices of our founding leaders who won our nation's freedom and resolve to strive towards building the India of their dreams.

On this momentous occasion, let us also remember that the progress and wellbeing of our nation impinge on delivering the benefits of development and ensuring dignity of life to each and every individual in our country. This is the foundational belief behind our civilizational value of 'share and care'. We must work together to achieve the noble constitutional ideal of 'securing for all our citizens - justice, liberty, equality and fraternity'.



On this joyous occasion of Independence Day, let us once again solemnly resolve to dedicate ourselves to rediscovering our inner strengths, to realizing the enormous potential of our people, and to give India its rightful place in the comity of nations."

# Medical camps by BRO as part of 'Azadi Ka Amrit Mahotsav'




New Delhi, August 15 2021: Border Roads Organisation (BRO) is conducting 75 medical camps in border states and friendly countries as part of 'Azadi Ka Amrit Mahotsav', marking the 75th anniversary of India's Independence. A large number of camps are being conducted in Jammu & Kashmir, Arunachal Pradesh, Ladakh, Uttarakhand, Sikkim, Mizoram & Tripura as well as Bhutan.

# TI Cycles launches Montra City Unplugged: E-Bicycles for Short Distance Commute

Chennai, August 15th 2021: Montra, the high end performance Bike brand of TI Cycles of India, has launched their first electric bike specially designed to make the short distance commute comfortable and convenient. The E-bicycle will be offered at the price of Rs.27, 279 making it an affordable and effective solution for daily travel. With this introduction, Montra aims to resolve the inconvenience of waiting for public transport or hassle of looking for parking at short distances by providing a comfortable and convenient ride to one's destination.

Montra E-bicycle is built on a light weight alloy frame which is easy to maneuver. With a dual mode, it allows the user to toggle between manual and electric mode as per their convenience. The provision of electric braking system ensures effective and smooth braking as it cuts off the motor power upon application of brakes.

The pandemic has instilled a fear of traveling by the public transport and many took to using their own vehicles even for short distances. However, given the traffic and parking situations, this wasn't the most feasible option. Montra took this insight and specially crafted its own E-Bicycle to cater to the audience traveling short distances. On an average, e-bicycles will run at the rate of avg.7 paisa per km while reducing individual carbon footprint significantly and saving hours of waiting time (public transport, refuelling, traffic) for the end consumer.

Commenting on the Montra E-bicycles launch, Mr. Vellayan Subbiah, MD, Tube Investments of India said, "The Short distance commute segment is dependent on choice and availability of public transport for most of us. With the launch of Montra E-bicycle, we want to give our customers the independence from the waiting period as they ride to their destination. With electric being the future of mobility, e-bicycle shall become the most after sought mobility solution among the urban commuters. A recent research suggests that, India's e-cycles market is projected to grow to USD 2.08 million by 2026 at a CAGR of 12.69 per cent, which is significantly huge and an untapped potential. As a brand, Montra has always been a customer centric brand - from being the first ones to use a carbon frame in the cycles in India to making the electric cycles light weight today for rapid, smooth, and easier transportation. With our new Montra E-bicycle product offering, we are sure to expand our family of customers, who are looking for quality and short distance every day commute."



With the country moving towards sustainable mobility, TI cycles promotes the use of Bikes to cut down on the carbon emission. With electric cycles, the user can travel longer distance without exerting oneself as compared to manual cycles, reducing their carbon footprint. By providing a cost effective solution, Montra E-Bicycle encourages the youth to be a part of the future.

# Madras Anchorage Round Table 100 & MAKEMYCHAIRS.com distributed 1000 study chairs to under privileged Children across India

Chennai, August 15 2021: Madras Anchorage Round Table 100 (MART 100) in association with MAKEMYCHAIRS.COM has launched a programme to pay tribute to the Missile man of India and former President of India – Late Dr. APJ Abdul Kalam. He was best known for promoting education and his unparalleled love for the students community. In line with Round Table India's ( RTI ) long term vision of Freedom through Education where it builds one classroom everyday positively impacting lakhs of students.

MART 100 under the Chairmanship of Tr. Rajesh has committed to provide student chairs for deserving students to help them tide over study from home, during this tough COVID situation with a tie up with Makemychairs.com. In this tie up Makemychairs.com's Director, Mr. Ajith Bohara has come forward to sponsor these 1,000 chairs to students through Madras Anchorage Round Table 100

Speaking about the project, MART 100's Chairman, Tr. Rajesh says, "The COVID-19 pandemic has badly disrupted the education of school students. The plight of children from poor economic backgrounds is worse. Often, they have to sit on the floor and attend online sessions. This affects their attention and over time, children develop health issues because of the wrong



posture. To help such students, we are distributing 1,000 chairs through Round Tables across India. The chairs have superior ergonomics which are specially designed for long sitting hours with high quality and durability."

10 chairs were distributed to children from Jai Gopal Garodia Govt Girls Higher Secondary School and G K Jain School. The chairs were distributed in the presence of Chief Guest Tr Priyesh Shah, IPP, RTI and guest of honor, Tr Santosh Raj, Chairman Elect Area 2, RTI. The event also saw giving away medallion set based on Late Dr APJ Abdul Kalam to donors who have come forward.

# Canara Bank, Regional Office, Thoothukudi conducted a Blood Donation camp in connection with 75th Independence Day celebration.

Thoothukudi, August 15, 2021 With the guidance of Our District Collector Dr. Senthil Raj, the campaign has been presidedover by the Assistant General Manager Smt Seena S Dev, Canara bank, Regional Office, Thoothukudi. Thoothukudi Government Hospital Doctor Shanthi, Canara Bank, Divisional Managers Sri Rabindran James D, Sri Anil Kumar T, Sri Ramesh Prabhu, Chief Manager of Beach Road branch Sri Gobi Kannan, Tuticorin Melur Branch Sri Raja Mahadevan and Branch heads of Turicorin Chidambaranagar, Beach Road, Mattakadai, Port, TTPS, Nandagopalapuram, Korkai, Eral, Arumuganeri, Agriculture Section Manager




Smt Renga lakshmi, Branch staffs and the Bank customers have participated in this campaign.

Owned & Pubilshed by R.SATHYANARAYANAN from No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 26, and printed by him at chennai offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-2, Editor: R.SATHYANARAYANAN, Email: hellomadrasdaily@gmail.com. Contact: 8148231942. Subject to Chennai Court Jurisdiction